பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை 24.11.2024 | அதிர்வு 115

## நாளை A/L பரீட்சை ஆரம்பம்! வடக்கு ஆளுநர் வாழ்த்து!!




கல்விப் பயணத்தில் முக்கியமான மைல்கல்லான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை நாளை எழுதும் அனைத்து மாணவர்களும்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# எமது தோல்விக்கு விக்கியே காரணம்

## மணி அணி கடும் சீற்றம்



“இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணியின் பாரிய பின்னடைவுக்கு சி.வி. விக்னேஸ்வரனின் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் விவகாரம்தான் மிகப் பெரிய காரணம்.”

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் குறிப்பிட்டார்.

02

# ரெலோவின் மத்திய குழுவை உடன் கூட்டுமாறு கோரிக்கை

## ஜனாவுக்கு விந்தன் கடிதம்





ரெலோவின் மத்திய குழுவை உடனடியாகக் கூட்டவும், அனைத்து மத்திய குழு உறுப்பினர்களுக்கும் உரிய முறையில் அழைப்பிதழ் அனுப்பவும் நடவடிக்கை எடுக்குமாறு கட்சியில் செயலாளர் நாயகம் கோ.கருணாகரமிடம் (ஜனா) கட்சியின் நிர்வாகச் செயலாளர் என்.விந்தன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கை கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சி சார்பில் நானும் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு 02/10/2024 அன்று எமது கட்சியின் திருகோணமலை காரியாலயத்தில் நடத்தப்பட்ட ரெலோவின் தலைமைக் குழு கூட்டம் ஏகமனதாக முடிவெடுத்திருந்தது.

தலைமைக் குழுக் கூட்டத்துக்கு எமது கட்சியின் வடக்கு, கிழக்கு

02



# பேராறு வான் கதவு திறக்கப்பட்டுள்ளதால் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை!

(கி.வசந்தன்)

வவுனியா, பேராறு அணையின் கீழ் பகுதியில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக தாழ் நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

அந்தவகையில் பேராற்றுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் அதன் 2 வடிகால்களும் 1 அடி உயரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளன. இதனால் நீர் செல்லும் பகுதியிலும், பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எமது தோல்விக்கு...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்றும் இல்லாத வகையில் எல்லாக் கட்சிகளையும் விட நாங்கள் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியமைக்கான காரணம் சி.வி. விக்னேஸ்வரனின் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் விவகாரம்தான்.

உண்மையை வெளியில் சொல்லத்தான் வேண்டும். அத்தோடு இதனை நான் அவரிடமும் நேரடியாகத் தெரிவித்து இருக்கின்றேன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் நாங்கள் இருந்திருந்தால் மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்க முடியும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அத்தோடு, இன்றும் நான் அந்தக் கட்சியில் இருந்து பிரியவில்லை. அந்தக் கட்சியைச் சாந்தவர்கள்தான் என்னைக் கட்சியை விட்டு விலக்கி வைத்தனர்.

தமிழ் மக்கள் அருவறுப்பான அரசியல் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு காரணம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான்.

அடுத்த கட்சிகளைத் தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருக்கையில் தற்போது தேசிய மக்கள் சக்தியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை வென்று விட்டனர்.

இந்தநிலையில், தமிழ் மக்கள் கூட்டணி இனி தேர்தல் அரசியல் என்று வரும்போது தனித்து நில்லாது கூட்டாகச் செயற்படுவதுதான் எமது நோக்கம்." – என்றார்.

### ரெலோவின்...

மாவட்ட செயலாளர்களும், துணை மாவட்ட செயலாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். குறித்த கூட்டத் தீர்மானத்துக்கு மாறாக பின்பு எனது பெயர் நீக்கப்பட்டிருந்தது.

இது விடயமாகவும், தேர்தல் காலத்தில் எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி, கட்சியின் பெயரால், எமது கட்சி சார்ந்த சில வேட்பாளர்கள் சில தொழில் நிறுவனங்களிடம் பல கோடிகள் பெற்று, எமது கட்சி சார்பில் ஏனைய மாவட்டங்களில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்குச் சம பங்கீடு அல்லது சம அளவில் நிதி ஒதுக்காத விடயம் தொடர்பாகவும், பெற்றுக்கொண்ட நிதித் தொகைகள் விபரம் தொடர்பாகவும், எமது கட்சி சார்ந்த சிலர் கடந்த அரசிடம் பன்முகப்படுத்தப்பட்ட விசேட நிதி ஒதுக்கீடு மூலம் பல கோடிகள் பெற்று, அதில் இருபது கோடி ரூபாவை ஒரு வேட்பாளருக்கு மட்டும் ஒதுக்கி, எமது கட்சியின் ஏனைய வேட்பாளர்களும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களும் திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாகவும், இவ்வாறான நிகழ்வுகளின் எதிரொலியாகவும் பிரதிபலிப்பாகவும் தேர்தல் காலங்களில் எமது கட்சியினரால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்புக்கள் உட்பட இன்னும் பல விடயங்கள் தொடர்பாகவும் கூடிப் பேசுவதற்கு ஏதுவாக இம்மாதம் 28 அல்லது 29 ஆம் திகதிகளில் எமது கட்சியின் மத்திய குழுவைக் கூட்டவும்.

மேலும் கட்சியின் மூத்த உறுப்பினரும் கட்சியில் கடந்த நாற்பது வருடங்களாகத் தொடர்ச்சியாகப் பயணிப்பவரும் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினரும் கட்சியின் நிர்வாகச் செயலாளரும் கட்சியின் முன்னாள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, யாழ்ப்பாணம் மாநகர சபை, வடக்கு மாகாண சபை போன்றவற்றின் உறுப்பினருமான எனக்கு அறிவிக்காமல் கடந்த 20.11.2024 அன்று குறிப்பிட்ட சிலருடன் இணைய (சூம்) வழியாக தாங்கள் தலைமைக் குழு கூட்டத்தைக் கூட்டியது கவலையளிக்கின்றது." – என்றுள்ளது.

### நாளை...

வெற்றியடைய உளமார வாழ்த்துவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் நிலையில், வடக்கு மாகாணத்திலிருந்து 17 ஆயிரத்து 212 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

"வடக்கு மாகாணம் தேசிய ரீதியில் கடந்த ஆண்டு பெற்றுக்கொண்ட முதலிடத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் மாணவர்கள் செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

உங்களது கடின உழைப்பு, உறுதிப்பாடு ஆகியன வெற்றிக்கான திறவுகோல் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்களில் நம்பிக்கை வைத்து உங்களாலான சிறந்த முயற்சியை வெளிப்படுத்தி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்." – என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.




# வவுனியா சிறைச்சாலையில் கைதி ஒருவர் மர்ம மரணம்

## சிறைச்சாலைக்குச் சென்று விசாரணை நடத்திய நீதிபதி

**(கி.வசந்தன்)**

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மேற்படி நபர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் கடந்த 19 ஆம் திகதி முதல் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

எதிர்வரும் 3 ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற இருந்த நிலையில் மேற்படி நபர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார். வவுனியா, செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 57 வயதான நபரே மரணமடைந்தவராவார்.

மரணமடைந்தவரின் சடலம் சிறைக் காவலர்களால் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதில் நீதிவான் த.திருஅருள் சிறைச்சாலைக்குச் சென்று சம்பவம் இடம்பெற்ற இடத்தைப் பார்வையிட்டதுடன், விசாரணைகளையும் நடத்தியிருந்தார்.

அத்துடன் வவுனியா வைத்தியசாலைக்கும் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், மேற்படி நபர் கொல்லப்பட்டாரா அல்லது தவறான முடிவெடுத்து மரணித்தாரா என்ற கோணத்தில் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# வவுனியா பல்கலைக்கழகத்தில் விசேட நிகழ்வு

**(கி.வசந்தன்)**

உலகளாவிய தொழில் முனைவோர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா பல்கலைக்கழகத்தில் விசேட நிகழ்வு ஒன்று நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்பு அலகும் இங்கிலாந்திலுள்ள புயுவுநு நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ்கால மற்றும் எதிர்கால முயற்சியாளர்களுக்கான முக்கிய செயலமர்வு இடம்பெற்றது.




இதன்போது இந்தியத் துணை தூதுவர் சாய் முரளி மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஏ.அற்புதராஜா உட்பட இந்திய மற்றும் வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட சுயதொழில் முயற்சியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.











# மன்னாரில் தொடர் மழையினால் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வு!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிப்பு அடைந்து வருகிறது. பல கிராமங்கள் வீதிகள் நீருக்குள் மூழ்கியுள்ளன. மக்களின் இடம்பெயர்வும் தொடர்கின்றது.

மன்னார் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் அனர்த்த மூகாமைத்துவ அதிகாரிகள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள இடங்களை பார்வையிட்டு செயற்பாட்டுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது பெய்து வரும் தொடர் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் அதிகமான இடங்கள் வெள்ளக் காடுகளாக காட்சி அளிக்கின்றன.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மன்னார் தீவு பகுதி மக்கள் மழை வெள்ளம் காரணமாக பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இப்பகுதியில் வெள்ள நீர் கடலுக்குள் செலுத்துவதற்கான சரியான வடிகால் அமைப்பு மேற்கொள்ளப்படாமையால் மன்னார் தீவு பூராகவும் காடுகளிலும் வீடுகளிலும் தெருக்களும் வெள்ளம் தேங்கியுள்ளது.

மன்னார் பெரும்பரப்பில் பெரும் பாலான வயல்கள் நிரில் மூழ்கியுள்ளன.

இதுவரையில் மன்னார் தீவில் 2074 குடும்பங்களைச் சேர்ந்த 7916 நபர்கள் வெள்ளத்தால் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரட்ணம் திலீபன் தெரிவித்தார்.

அத்துடன் 222 குடும்பங்களைச் சேர்ந்த 781 பேருக்கு உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. 173 குடும்பங்களைச் சார்ந்த 556 நபர்களுக்க சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் தீவில் வெள்ளத்தால் பாதிப்படைந்து வரும் மக்களின் நலன் கருதி ஆறு நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எழுத்தூர் செல்வநகர் முத்துமாரி கோவிலில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 57 நபர்களும் அன்னை திரேசா பாடசாலையில் 56 குடும்பங்களைச் சார்ந்த 305 நபர்களும் பேசாலை சென். மேரிஸ் பாடசாலையில் 26 குடும்பங்களைச் சார்ந்த 75 நபர்களும் அல் மினா வித்தியாலயத்தில் 6 குடும்பங்களைச் சார்ந்த 20 நபர்களும் ஓலைத் தொடுவாய் பாடசாலையில் 53 குடும்பங்களைச் சார்ந்த 156 பேரும் பேசாலை முருகன் கோவிலில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் மழை தொடருமானால் இடம்பெயரும் மக்கள் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் கொள் எப்படுகின்றது. அத்துடன் வெள்ள நீருடன் பாம்புகளும் அடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரத்தில் மன்னாரில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை தேசிய மக்கள் சக்தி வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வத்தம்பி திலக்நாதன் மற்றும் ஆறுமுகம் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் ஆகியோர் வங்காலை, மன்னார், தாழ்வுபாடு மற்றும் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களையும் நீரில் மூழ்கியுள்ள வயல் நிலங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.





# தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே கப்பல் போக்குவரத்துத் தொடர்பில் ஆராய்வு

(ந.லோகதயாளன்)

இலங்கையின் தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையே விரைவில் பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்படும் நோக்கில் தமிழ்நாடு கடல்சார் வாரிய தலைமைச் செயல் அலுவலர் மா.வள்ளலார் தலைமையிலான குழுவினர் தீவிர ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை தலைமன்னார் – தனுஷ்கோடி இடையேயான கப்பல் போக்குவரத்து 1914 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஐம்பது ஆண்டுகள் நடைபெற்று வந்த கடல் பயணம் 1964 இல் அடித்த கோரப் புயலில் தனுஷ்கோடி நிலை குலைந்ததால் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கப்பல் போக்குவரத்து இலங்கை உள்நாட்டு போர் காரணமாக சில ஆண்டுகளில் சேவை முற்றிலும் நிறுத்தப்பட்டது.

இலங்கை– இந்தியா இடையே கப்பல் பயணத்தை மீண்டும் தொடங்க இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கடந்த 2022 ஆம் ஆண்டு பச்சை கொடி காட்டியது.

குறிப்பாக நாகை – காங்கேசன்துறை மற்றும் இராமேஸ்வரம் – தலைமன்னார் இடையேயான கப்பல் பயணத்தை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது.

இது தொடர்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் இந்திய தொழில் முதலீட்டாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது இலங்கை துறைமுகம், கப்பல் மற்றும் விமான சேவைத் துறை அமைச்சர் நிமல் சிறிபாலா டி சில்வா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமன்னார் முனையத்தை மேம்படுத்துவது, தலைமன்னார் – தனுஷ்கோடி இடையே ஆன்மீக சுற்றுலா துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து இந்தியாவின் தமிழ் நாட்டின் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையிலான அதிகாரிகள் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக தமிழ்நாடு ராமேஸ்வரம் தீவில் ஆய்வு மேற்கொண்டு இந்திய மத்திய அரசுக்கு அறிக்கை அளித்தனர்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 14 ஆம் திகதி காங்கேசன் துறை – நாகை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து இலங்கை – இந்திய அரசுகளால் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இந்தியாவின் தமிழக அரசு சார்பில் இந்தியா – இலங்கை நாடுகளுக்கிடையே குறைந்த தூர பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்கும் நோக்கில் தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் – தலைமன்னார், இராமேஸ்வரம் – காங்கேசன்துறை ஆகிய இரண்டு வழித்தடங்களில் இயக்குவதற்கு இராமேஸ்வரத்தில் கப்பலணையும் மேடை, பயணிகள் தங்குமிடம், சுங்க மற்றும் குடிவரவு பிரிவு சோதனை மையங்கள் ஆகிய கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் இந்திய மத்திய அரசின் ஒப்புதலுக்கு சமீபத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடல் பகுதியில் தமிழக அரசின் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக ஐ.ஐ.டி. நிபுணர்கள் குழு கடலுக்கு அடியிலும், கரையிலும் மண்ணின் தரம் குறித்து நான்கு இடங்களில் ஆய்வு செய்து பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனிடையே நேற்று முன்தினம் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர், தலைமைச் செயல் அலுவலர் மா.வள்ளலாளர் ஐ.ஏ.எஸ். தலைமையில் அதிகாரிகள் குழுவினர் தீவின் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டனர். கப்பல் சேவை மற்றும் சுற்றுலா படகு சவாரி இயங்குவதற்கு பொருத்தமான இடங்கள் குறித்து இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடற்கரையில் மணல் ஆய்வு செய்த பகுதிகள், தங்கச்சிமடம் வில்லூண்டி தீர்த்தம், பாம்பன் குந்துகால் துறைமுகம், தனுஷ்கோடி பாக்ஜலசந்தி கடற்கரை உள்ளிட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

இது குறித்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர், தலைமைச் செயல் அலுவலர் மா.வள்ளலாளர் ஐ.ஏ.எஸ். ஆய்வுக்கு பின் ஊடகங்களுக்குப் பதிலளிக்கையில்,

இராமேஸ்வரம் – தலைமன்னார் இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்தை விரைந்து ஆரம்பிப்பதற்குப் பல்வேறு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீன்பிடித் தொழில் மற்றும் கடல் வளம் பாதுகாப்புக்கு ஏற்றவாறு கப்பல் போக்குவரத்து வழித்தடம் அமையும். முதல் கட்டமாக இராமேஸ்வரம் – தலைமன்னார் இடையே 150 பயணிகள் செல்லும் வகையில் கப்பல் இயக்கப்படும். இரண்டாம் கட்டமாக உள்ளூர் சுற்றுலா தளங்களான அக்னி தீர்த்தம், வில்லூண்டி தீர்த்தம், பாம்பன் குந்துகால், குருசடை தீவு, தனுஷ்கோடி உள்ளிட்ட பகுதிகளை படகில் சுற்றி பார்வையிடும் வகையில் படகு சவாரி ஆரம்பிக்கும் திட்டமும் உள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நினைவேந்தும் உரித்து

ஈழத் தமிழர்களின் விடுதலை வேண்டிய வீரசுதந்திர வரலாறு நமது மாவீரர்களின் இரத்தத்தாலும் உயிர்த் தியாகத்தாலும் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் இனத்தின் சுதந்திரத்திற்காக - கௌரவத்திற்காக - பாதுகாப்பிற்காக - இருப்பிற்காக - தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகளை ஒன்று சேர தமிழினம் பூஜிக்கும் காலம் இது.

ஆனால் மறைந்த எமது உறவுகளை - இனத்துக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த இரத்த உரித்துகளை - தமிழர் தேசம் நினைவேந்துவதற்கு பௌத்த - சிங்களப் பேரினவாதம் இலகுவில் இடமளிப்பதில்லை. அனுமதிப்பதில்லை. தமிழரின் நினைவேந்தும் உரிமையை பறிப்பது அல்லது அடக்கி, அதை தடுப்பது, சிறுபான்மையினரை ஒடுக்கும் பேரினவாதத்தின் அடிப்படை பண்பியல்பில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்கின்றது.

ஆயுதப்போராட்டம் மௌனித்து 15 வருடங்கள் கடந்த பின்னரும், தமிழர் தேசம் தம் மாவீரர்களுக்காக விளக்கேற்றி அஞ்சலிப்பதற்கு சிங்களம் இலகுவில் அனுமதிப்பதில்லை. தன்னுடைய பொலிஸ் மற்றும் முப்படைகள் மூலம் அடக்குமுறையை ஏவி, அந்த நினைவேந்தலைக் குழப்புவதை தன்னுடைய பரவணிப் பழக்கமாக அது வைத்திருக்கின்றது.

உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட சுடுகாடுகளை - அவர்களின் சமாதிகளை - மதிப்பதும் கௌரவிப்பதும் மனிதாபிமான பண்பு. மனித நாகரிகத்தின் வழக்காறு அது.

ஆயினும், பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள் புதைக்கப்பட்ட துயிலும் இல்லங்களை புல்டோசர் கொண்டு சிதைத்தழித்த கொடூர இனம் என்ற பெருமையை பௌத்த - சிங்களம் உலகில் நிலைநாட்டி இருக்கின்றது. மீளாத் துயில் கொண்டோரை மதிக்கும் மனிதாபிமான மாண்பு சற்றும் இல்லாத காட்டுமிராண்டித்தனமான ஓரினம் என்ற மிருகத்தனமான பெயரை இந்த நடவடிக்கை மூலம் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசியல் தலைமை பீடங்கள் தமது இனத்துக்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றன. அந்த கொடூர போக்கே நேற்று வரைத் தொடர்ந்தது.

புதிய ஆட்சி பீடம் - தேசிய மக்கள் சக்தியின் அதிகாரம் மையம் - இந்த போக்கில் இருந்து சற்று மாறுபாடாக விடயங்களை அணுக விரும்புகின்றது என்ற செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

மாவீரர் தின நினைவேந்தல்களை குழப்புவது, தலையீடு செய்வது அடக்குவது போன்ற நடவடிக்கைகளை தவிர்த்து செயல்பட புதிய ஆட்சி பீடம் தீர்மானித்து இருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள் உண்மையாயின், அவை நல்லிணக்கத்திற்கான ஆரம்ப படிகளே. ஆயினும் உண்மையான நல்லிணக்கத்தை முழுமையாக எட்டுவதற்கு இன்னும் பல படிகள் தாண்ட வேண்டும்.

“மாவீரர்களின் புகழுடல்கள் விதைக்கப்பட்ட துயிலும் இல்லங்களில் இராணுவத்தினரின் சப்பாத்துக்கள் மிதித்துக் கொண்டிருக்கும் வரை நல்லிணக்கத்துக்கு வாய்ப்பேயில்லை.” - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இதே மாவீரர் வாரத்தில் தெரிவித்த கருத்தை புதிய ஆட்சியாளர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

தமிழர்களுடைய உரிமைக்காக போராடிய விடுதலை புலிகள் போல, இன்றைய ஆட்சியாளர்களும் எழுபதுகளின் ஆரம்பத்திலும் எண்பதுகளின் கடைசியிலும் இரண்டு தடவைகள் இந்த நாட்டில் ஆயுதம் தாங்கிய புரட்சிக்காகப் போராடியவர்கள். அவர்களுடைய தலைவர் றோஹண விஜேவீர 35 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் ‘பயங்கரவாதி’யாக அடையாளப்படுத்தப்பட்டே கொல்லப்பட்டார். ஆனால் அவரை இன்று பெரிய அளவில் நினைவு கூரும் உரித்து இப்போது ஆட்சியில் இருக்கும் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்திக்கு உண்டு.

அவர்களுடைய போராட்டம் மௌனித்த, பின்னர் அப்போது வரை ‘பயங்கரவாதி’யாக அடையாளப்படுத்தப்பட்ட றோஹண விஜேவீரவை நினைவேந்தி உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கும் உரிமை தமது அரசியல் இயக்கத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றமையை அனுபவபூர்வமாக உணர்ந்துள்ள அக்கட்சி அதே பாணியில் தமிழர்களும் தமது இனத்துக்காகவும் தமது மக்களுக்காகவும் தங்கள் உயிரை ஈகம் செய்த மாவீரர்களுக்காக அஞ்சலிப்பதற்கான உரித்தை வழங்குவது தான் நியாயம். அதைச் செய்ய அவர்கள் முன் வருவார்கள் என்று தமிழர் தேசம் உரிமையோடு எதிர்பார்க்கின்றது.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் இரத்த சுத்திரிப்புப் பிரிவுக்கு உதவிப் பொருள்கள் வழங்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இரத்த சுத்திகரிப்புப் பிரிவுக்கு அண்மையில் நோயாளர் கட்டில், சக்கரநாற்காலி மற்றும் காற்று மெத்தை ஆகிய பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.


சாவகச்சேரி, கற்குளி வீதியைச் சேர்ந்த அமரர் வசந்தநாயகி இராஜசங்கரியின் நினைவாக அவரது குடும்பத்தினரால் தென்மராட்சி சமூக மேம்பாட்டுக் கழகம் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.




## மாவீரர் நாளை முன்னிட்டு மருதங்கேணியில் இரத்ததானம்

மாவீரர் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு இளைஞர்களால் இரத்ததான நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை (25) திங்கட்கிழமை காலை 09 மணியில் இருந்து மாலை 03 மணிவரை இரத்ததான முகாம் மருதங்கேணி வடக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.









# கற்பிட்டியில் இடம்பெற்ற இரத்ததான முகாம்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் கற்பிட்டி கிளை புத்தளம் தள வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் இணைந்து 10 ஆவது தடவையாக கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இரத்த தான முகாமை இன்று (24) ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் கற்பிட்டிக் கிளைத் தலைவர் எம்.எச்.எம். ஆஷாத் தலைமையில் இது இடம்பெற்றது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் என்ற கருப்பொருளில் இடம்பெற்ற இரத்த தான முகாமில் இன மத வேறுபாடு இன்றி சகலரும் கலந்து கொண்டு தமது இரத்தம் வழங்கினர். இதில் கலந்து கொண்டவர்களுக்கு சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் கற்பிட்டி கிளையால் நினைவு பரிசு ஒன்றும் வழங்கப்பட்டது.









# அம்பாறையில் கனமழை; போக்குவரத்தில் பாதிப்பு!

## அவதானமாக இருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்து

(பாறுக் ஷிஹான்)

வங்காள விரிகுடாவின் தென் கிழக்குப் பகுதியில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கையின் கிழக்குக் கரையை அண்மித்ததாக அடைமழை ஏற்பட்டுள்ளது.

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 – 70 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி அதிகரித்து வீசக் கூடும்.

ஆகையால் குறிப்பிட்ட இந்தக் கடல் பிராந்தியங்களுக்கு நாளை முதல் எதிர்வரும் 28 ஆம் வரையில் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத் தப்படுகின்றனர்.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல்களை கவனத்தில் கொண்டு செயற்படுமாறு பொது மக்கள் வேண்டப்படுகின்றனர்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் வட கிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும். இன்று 23 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதிவரை வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழை வீழ்ச்சி கிடைக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது.

இந்த நிலையில் அனைவரையும் வெள்ள அனர்த்தத்துக்கு உரிய முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் எம்.றியாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் நேற்று இரவு முதல் பெய்த மழையால் தாழ் நிலங்களில் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது.எனினும் இதுவரையில் எந்தப் பகுதிலும் மக்கள் இடம் பெயர்வுகள் எதுவும் பதிவாக வில்லை.

அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகாமையில் ஏற்பட்டுள்ள தாளமுக்க நிலையினால் இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் படி பொத்துவில் பிரதேசத்தில் இருந்து தென் கிழக்காக சுமார் 1300 கிலோ மீற்றர் தொலைவில் இது





உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக வெள்ள நீர் வழிந்தோட அக்கரைப்பற்று ஆலைய டிவேம்பு சின்னமுகத்துவார கழிமுகம் வெட்டப்பட்டுள்ளது.

இன்னும் மூன்று நாட்களுக்கு அதிக மழை பெய்யும் என்பதால் முன்னாயத்த நடவடிக்கைகளில் இளைஞர்கள், உள்ளூர் சமூக நிறுவனங்கள் களத்தில் இறங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டா ளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, பாண்டிருப்பு, மருத முனை, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் பெருக ஆரம்பித்துள்ளன.

தொடர்ச்சியாக கன மழை பெய்வதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்ட மாக பார்வையிடச் செல்வதை தவிர்த்து பொதுமக்கள் அவ தானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டுள்ளன.





# வாக்குகளை சிதறடித்தவை உருவான சிறிய கட்சிகளே!

## புத்தளத்தில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்

புத்தளத்து மக்களுக்கான நாடாளுமன்றப் பிரதி நிதித்துவத்தை இலகுவாக பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இருந்த போதும் அதனை இல்லாமல் செய்தவர்கள் 5 சதவீத வாக்குகளையும் பெற்றுக் கொள்ள முடியாத சிறிய கட்சிகளே.

நாம் இவர்களுக்கு வாக்களிக்க வேண்டாமெனக் கேட்டு வந்த போதும், அவர்களுக்கு மக்கள் வாக்களித்தமையே இந்தப் பிரதிநிதித்துவம் பறிபோனமைக்கு காரணம்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் இவ்வாறு கூறினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிட்ட வேட்பாளர்களான என்.ரீ.தாஹீர் மற்றும் சட்டத்தரணி முஹம்மட் ஆகியோரின் இல்லத்தில் வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் இங்கு அவர் பேசுகையில்,

கூட்டணி தொடர்பில் பேசப்பட்ட போதும் இந்த கூட்டணியின் வேட்பாளர்கள் தொடர்பில் மக்களின் நம்பிக்கை ஏற்படவில்லை. இதற்கான காரணமாக கடந்த கால அவர்களின் செயற்பாடாகும். இதனால்தான் இந்த முறை தேசிய கட்சி ஒன்றில் போட்டியிடுவதன் மூலம் நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் பற்றி நீண்ட கலந்துரையாடலின் பின்னர் முடிவு எட்டப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் 3 தசாப்தங்களாக நாடாளுமன்ற அதிகாரம் இல்லாமல் இருந்த போது முதன் முதலாக சிரேஷ்ட புத்தளத்தின் அரசியல்வாதியான அல்-ஹாஜ். எம்.எச்.எம்.நவவிக்கு தேசியப் பட்டியல் வழங்கி, அதன் பிற்பாடு அடுத்த தேர்தலில் கூட்டமைப்பு அமைத்து பல அரசியல் கட்சிகளை ஒன்று சேர்த்து நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதிலும், இந்த தேர்தலில் வியூகம் அமைத்து ஒன்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக்கொள்வதாக இருந்தால் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் புத்தளம் மாவட்டத்தில் உள்ளதால் அதில் 30 ஆயிரம் வாக்குகளை ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அளிப்பதன் அவசியம் தொடர்பில் நாம் பேசிவந்தோம்.

ஆனால் மக்கள் இது தொடர்பில் கரிசனை செலுத்தாது வாக்களித்தன் பலன் நாம் எதிர்பார்த்த எமது நாடாளுமன்ற பிரதிநிதியை இழந்துள்ளோம்.

இன்று இந்த மக்கள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது. எமக்கான ஒரு நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை இழந்துள்ளோம் என்று மக்கள் கவலை அடைகின்றனர்.



சில பகுதிகளில் வாழும் எமது மக்களின் பஞ்சமும்,வறுமையும் சில கட்சிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளது. எமது புத்தளம் மக்களுக்கு ஏதும் அனர்த்தம் ஏற்பட்டால் தேர்தல் காலத்தில் உங்களுக்கு காசு கொடுத்தவர்கள் வருவார்களா என கேட்கவிரும்புகின்றேன்.

தேர்தல் முடிந்ததும் நான் இன்று உங்களது மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளேன். ஏனெனில் நாம் இந்த மக்களை நேசிப்பவன் என்பதால், நாங்கள் இன்று உங்களுடன் கலந்துள்ளோம். இது என்றும் நாமும், எமது கட்சியும் உங்கள் மீது கொண்டுள்ள அன்பாகும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மிகவும் குறைந்த வாக்குகளின் வித்தியாசத்தில் தாஹிர் தோல்வியை தழுவியமை பெறும் கவலை தருகின்றது. அவர் வெற்றி பெறுவார் என்ற திட்டத்தை வகுக்க வேண்டும் என்று மேடை மேடையாக நாம் சொன்னோம். சிலர் அதனை புரிந்து கொள்ளாமல் செயற்பட்டமையைப் பார்க்க முடிந்தது.

புத்தளம் மக்களின் அரசியல் என்பது எம்முடன் பின்னிப் பிணைந்தது.கடந்த கால அரசியல் அதிகாரங்களின் போது நாம் பல்வேறு அபிவிருத்திகளை செய்துள்ளோம். பாடசாலை, மதத் தளங்கள், வைத்திய சாலைகளுக்கான தேவைப்பாடுகள், மின்சார வசதிகள், மீனவ சமூகத்துக்கான உதவிகள், பாதைகள், வாழ்வாதார திட்டங்கள் என சிலவாகும்.

எனவே நீங்கள் மனம் தளராது எமது கட்சியுடன் இணைந்து பயணியுங்கள் அடுத்துவருகின்ற உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலகளில் நாம் சிந்தித்து, யதார்த்தத்தை புரிந்து கொண்டு புத்திசாதுரியமாக செயற்பட வேண்டும். – என்றார்.

எமது கட்சியின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு நன்றிகளையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் இதன் போது தெரிவித்தார்.





# லிந்துலை சுகாதார அலுவலகத்துக்கு புதிய கட்டடம் அமைக்க அடிக்கல்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மண்சரிவு அபாயம் காரணமாக வெளியேற்றப்பட்ட தலவாக்கலை லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குப் பதிலாக புதிய அலுவலகம் அமைப்பதற்கான அடிக் கல் அண்மையில் நடப்பட்டது.

லிந்துலை பிராந்திய வைத்திய சாலைக்குச் சொந்தமான காணியில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள் ளது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வு நுவரெ லியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல பெரேரா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெய்ஷினி துரை ராஜ், லிந்துலை பிராந்திய வைத்திய சாலையின் பிரதம வைத்திய அதிகாரி அசேல சுரஞ்சித் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்

## வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபா யம் காணப்படுவதில் அம்பாறை மாவட் டத்தின் சாய்ந்தமருது பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று (24) முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக் கமைய சாய்ந்தமருது சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலை மையிலான மேற்பார்வை பொது சுகா தார பரிசோதகர், பொது சுகாதார பரி சோதகர்கள், டெங்கு களத்தடுப்பு உதவி யாளர்கள்,சுகாதார ஊழியர்கள் உள் ளிட்ட குழுவினர் இந்தச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

தற்போது பருவகால மழை பெய்து வருவதால் இதற்கமைய டெங்கு நுளம் புகள் பெருகக் கூடிய இடங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான டெங்கு கள தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் டெங்கு



நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

சுற்றுச்சூழலை அசுத்தமாகவும் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய வகையிலும் வைத்திருந்தவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. சிலருக்கு எதிராக எச்சரிக்கையும் விடுக் கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கையில்,

பருவப்பெயர்ச்சி மழை காரணமாக நீர் தேங்கியுள்ள இடங்களில் பெருகும் டெங்கு நுளம்பால் ஏற்படும் தொற்று நோய்களை தடுப்பதற்காக சாய்ந்தம ருது சுகாதார பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டோம். இதன்போது பொதுச் சுகாதார பரிசோதகர் பொதுச் சுகாதார மாதுக்கள் மற்றும் டெங்கு ஒழிப்புப் பிரிவினர் உட்பட 10 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை 480 இற்கும் மேற்பட்ட வீடுகளில் டெங்கு நோய் சம்பந்தமான பரிசோதனைகளை மேற்கொண்டு இருக்கின்றோம். இருந்தபோதிலும் எவ்விதமான வீடுகளிலும் டெங்கு நோய் ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான நிலைமைகளோ அல்லது ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான சூழலோ இல்லை என்பது வரவேற்கத்தக்க விடயமாக காணப்படுகின்றது.

எனவே மேலும் நோய்களை கட்டுப் படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது. இனிவரும் காலம் மாரி காலம் என்பதால் மழை தேங்கக் கூடிய இடங்களை இனம் கண்டு அவற்றை சுத்தப்படுத்தினால் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.- என்றார்.



# அக்கரைப்பற்று இராமகிருஷ்ணாவில் தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையின் பரிசளிப்பு விழாவானது நேற்று அதிபர் ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலையின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஒலுவில் தென்கிழக்கு பல்கலைகழக பிரதி பதிவாளர் சஞ்சீவி சிவகுமார், விசேட அதிதியாகவும், திருக்கோவில் கல்வி வலயத்தின் கல்வி நிர்வாகத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளரும், ஆலையடிவேம்பு கோட்டக்கல்வி பணிப்பாளருமான கீ.கமலமோகனதாசன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு நினைவுச் சின்னம், சான்றிதழ்வழங்கிகௌரவித்திருந்தனர்.

சிறப்பு அதிதியாக தம்பட்டை மகா வித்தியாலய அதிபர் ச.ஆனந்தரூபன் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்களான கே.ஜயந்தன், ஆர்.சதீஸ், சி.மதியழகன் ஆகியவர்களின் வழிகாட்டலிலும், பாடசாலை நூலக அபிவிருத்தி குழு பிரதி அதிபருமான எஸ்.மகேஸ்வரனின் ஒருங்கிணைப்பிலும்–

பாடசாலை நூலக குழு உறுப்பினர்களான ஆசிரியர் ரி .கிரிசன், ஆசிரியை சப்னாபானு, நூலக உதவியாளர்களான எஸ்.சிறிகாந்தன், எம்.றமீன், திருமதி.கே.கிரிஜாழினி மற்றும் மாணவர்களான எம். ஜயதேவ், சாருன், ஹம்ஷாளினி, ரட்ஷனா, மஹாசினி, சப்தவி ஆகியோரின் பங்களிப்புடன் திறன்பட இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய வாசிப்பு தொடர்பாக ஒக்ரோபர் மாதம் இடம் பெற்றிருந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும், மற்றும் நினைவு சின்னங்களும் வருகை தந்திருந்த அதிதிகளால் வழங்கப்பட்டன.

பாடசாலையின் நூலக அபிவிருத்திக் குழுவின் திட்டத்தால் இவ் வருடம் ஆலையடிவேம்பு கல்விக் கோட்ட பாடசாலைகளின் கட்டாயத் தேவையுடைய இரு மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிவைக்கப்பட்டன.

பாடசாலையின் முகாமைத்துவ உதவியாளர் ஜெ. தர்சானந்தனின் சேவையைப் பாராட்டி அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.












# மகாராஷ்டிராவில் பா.ஜ.க கூட்டணி வெற்றி பெற்று சாதனை படைத்தது

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 230 தொகுதிகளை கைப்பற்றி சாதனை பெற்றுள்ளது. புதிய முதல்வர் யார் என்பதை பா.ஜ.க, சிவசேனாவின் ஷிண்டே அணி, தேசியவாத காங்கிரஸின் அஜித் பவார் அணி ஆகிய 3 கட்சிகளும் இணைந்து முடிவு செய்து அறிவிக்க உள்ளன. பா.ஜ.க. மூத்த தலைவர் தேவேந்திர பட்னாவிஸ் புதிய முதல்வராக வாய்ப்பு நிலவுகிறது.

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவை தேர்தல் மொத்தம் உள்ள 288 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 20 திகதி நடைபெற்றது. இதில், ஆளும் பாஜக, சிவசேனா (முதல்வர் ஏக்நாத் ஷிண்டே அணி), தேசியவாத காங்கிரஸ் (துணை முதல்வர் அஜித் பவார் அணி அடங்கிய மகாயுதி கூட்டணிக்கும், காங்கிரஸ், சிவசேனா (உத்தவ் தாக்கரே அணி) தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார் அணி) அடங்கிய மகா விகாஸ் அகாடி கூட்டணிக்கும் இடையே நேரடி போட்டி நிலவியது. மகாயுதி கூட்டணியில் பா.ஜ.க. 149, ஷிண்டே அணி 81, அஜித் பவார் அணி 59 தொகுதிகளில் போட்டி



யிட்டன. மகா விகாஸ் அகாடி கூட்டணியில் காங் கிரஸ் 101, உத்தவ் தாக்கரே அணி 95, சரத் பவார் அணி 86 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தின.

வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. ஆரம்பம் முதலே பா.ஜ.க. தலைமையிலான மகாயுதி கூட்டணி முன்னிலை வகித்தது. இதில், பா.ஜ.க. 132 தொகுதிகளை கைப்பற்றி அபார வெற்றி பெற்றது. அதன் கூட்டணி கட்சிகளான சிவசேனாவின் ஷிண்டே அணி 57 தொகுதிகளிலும், தேசியவாத காங்கிரஸின் அஜித் பவார் அணி 41 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. ஒட்டுமொத்தமாக பா.ஜ.க. கூட்டணி 230 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்துள்ளது. கோப்ரி-பச்பகாடி தொகுதியில் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே வெற்றி பெற்றார். துணை முதல்வர்களான தேவேந்திர பட்னாவிஸ், நாக்பூர் தெற்கு மேற்கு தொகுதியிலும், அஜித் பவார், பாராமதி தொகுதியிலும் வெற்றி பெற்றனர்.

மகாராஷ்டிராவில் தற்போது பா.ஜ.க. கூட்டணியில் சிவசேனாவை சேர்ந்த ஏக்நாத் ஷிண்டே முதல்வராகவும், பா.ஜ.க. மூத்த தலைவர் தேவேந்திர பட்னாவிஸ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் அஜித் பவார் துணை முதல்வர்களாகவும் உள்ளனர். தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில் புதிய முதல்வர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. தேசிய செயலாளர் வினோத் தாவ்டே கூறும்போது, "மகாராஷ்டிர சட்டப்பேரவையின் பதவிக் காலம் எதிர்வரும் 26 ஆம் திகதி நிறைவடைகிறது. அதற்கு முன்பாக புதிய அரசு பதவியேற்க வேண்டும். புதிய முதல்வர் குறித்து பா.ஜ.க, ஷிண்டே அணி, அஜித் பவார் அணி இணைந்து முடிவு செய்யும். முதல்வர் யார் என்பதை 23 ஆம் திகதி இரவு அல்லது 24 ஆம் திகதி முடிவு செய்வோம்" - என்றார்.

# கர்நாடகாவில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது

## 2 முன்னாள் முதல்வர் மகன்கள் தோல்வி

கர்நாடகாவில் 3 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் 3 தொகுதிகளிலும் பா.ஜ.க, ம.ஜ.த கூட்டணியை வீழ்த்தி காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றுள்ளது. இதனால் அக்கட்சியினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கர்நாடக சட்டப்பேரவையில் வெற்றிடமாக இருந்த சென்னப்பட்டணா, சிகாவுன், சந்தூர் ஆகிய 3 தொகுதிகளுக்கு கடந்த 13 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் தனித்து போட்டியிட்ட நிலையில், எதிர்க்கட்சியான பா.ஜ.க, முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று காலையில் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. காலை 9 மணி முதலே 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் அதிக வாக்குகளை பெற்று முன்னிலை வகித்தனர்.

சென்னபட்டணாவில் பா.ஜ.க, ம.ஜ.த. கூட்டணியின் வேட்பாளரும் மத்திய அமைச்சர் குமாரசாமியின் மகனுமான நிகில் கவுடா, காங்கிரஸ் வேட்பாளர் சி.பி.யோகேஸ்வரை விட அனைத்து சுற்றுகளிலும் குறைந்த வாக்குகளே பெற்றார். இறுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சி.பி.யோகேஷ்வர் 25 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்



நிகில் கவுடாவை தோற்கடித்தார். தொடர்ந்து 3 ஆவது முறையாக நிகில் கவுடா தோல்வி அடைந்ததால் அவரது கட்சியினர் சோகம் அடைந்தனர்.

சிகாவுன் தொகுதியில் முன்னாள் முதல்வர் பசவராஜ் பொம்மையின் மகன் பாரத் பொம்மையை எதிர்த்து காங்கிரஸ் வேட்பாளர் யாசிர் அகமது பதான் எதிர்த்து போட்டியிட்டார். அங்கு இருவரிடமும் பலத்த போட்டி நிலவிய நிலையில் இறுதியில், யாசிர் அகமது பதான் 13 ஆயிரத்து 466 வாக்குகள் வித்தியாசத்தில் பரத் பொம்மையை தோற்கடித்தார். இதனால் பசவராஜ் பொம்மையின் ஆதரவாளர்கள் கடும் அதிருப்தி அடைந்தனர்.

சந்தூர் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் பங்காரு ஹனுமந்தாவை எதிர்த்து காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் துக்காராமின் மனைவி அன்னபூர்ணா போட்டியிட்டார். இந்த தொகுதியில் இருவரிடமும் கடும் போட்டி நிலவியது. முதல் 2 சுற்றுகளில் முன்னிலை வகித்த அன்னபூர்ணா அடுத்த 3 சுற்றுகளில் சற்று பின் தங்கினார். பின்னர் பங்காரு ஹனுமந்தாவை விட 9 ஆயிரத்து 645 வாக்குகள் அதிகமாக பெற்று, வெற்றி பெற்றார்.

கர்நாடக மாநிலத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் அமோகமாக வெற்றி பெற்றதால் அக்கட்சியினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார் ஆகியோருக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இதுகுறித்து துணை முதல்வரும் கர்நாடக காங்கிரஸ் தலைவருமான டி.கே.சிவகுமார் கருத்து தெரிவிக்கையில்,

"காங்கிரஸின் நல்லாட்சிக்கு மக்கள் இந்த வெற்றியை தந்துள்ளனர். முதல்வர் சித்தராமையாவின் ஊழலற்ற ஆட்சிக்கு மக்கள் நற்சான்றிதழ் அளித்துள்ளனர். எங்களது 5 உத்தரவாத திட்டங்களையும் வாக்காளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேவேளையில் பா.ஜ.க, ம.ஜ.த. கூட்டணியை மக்கள் விரும்பவில்லை. முன்னாள் முதல்வர்கள் குமாரசாமி, பசவராஜ் பொம்மை இருவரின் மகன்களையும் தோற்கடித்துள்ளனர். இந்த தேர்தலுக்காக அந்த கட்சியினர் ஏராளமான பணத்தை செலவு செய்த போதும் வெற்றிபெற முடியவில்லை." - என்றார்.




# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்

மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய பாரிய வான்வழித் தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என லெபனான் அதிகாரிகள் கூறுகின்றனர். உள்ளூர் நேரப்படி நேற்று மாலை 4 மணிக்கு முன்னறிவிப் பின்றி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது ஒரு சிரேஷ்ட ஹெஸ்பொல்லா அதிகாரியைக் கொல்லும் முயற்சி என்று இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இடிபாடுகளை அகற்றவும், உடல்களை மீட்கவும் அவசரகால பணியாளர்கள் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மீட்கப்பட்ட உடல் பாகங்கள் மரபணு சோதனைக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




# ஏவுகணைகளின் உற்பத்தியை அதிகரிக்குமாறு ரஷ்ய இராணுவத்திற்கு புடின் அவசர உத்தரவு

ஓரேஷனிக் ஏவுகணைகளின் உற்பத்தியை அதிகரிக்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அந்நாட்டு இராணுவத்திற்கு அவசர உத்தரவு பிரப்பித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி விடயத்தை அந்நாட்டு இராணுவ அதிகாரிகளுடன் இடம்பெற்ற ஆலோசனை கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களில் ரஷ்யா உக்ரைன் மோதல் தலைகீழாக மாறிவிட்ட நிலையில் கிட்டதட்ட உலகப் போரே தொடங்கும் அளவுக்குத் தீவிரமானதாக மாறியுள்ளது. இந்தநிலையில், நீண்ட தூரம் சென்று தாக்கும் தங்கள் ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனுக்கு மேற்குலக நாடுகள் அனுமதி அளித் துள்ளது.



இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்திய நிலையில், அதற்குப் பதிலடியாக ரஷ்யா அதிநவீன கண்டம் விட்டு கண்டம் செல்லும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தற்போது, ரஷ்ய ஜனாதிபதி ஹைப்பர் சோனிக் ஓரேஷ்னிக் பாலிஸ்டிக் ஏவுகணையின் உற்பத்தியை அதிகரிக்க உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்த தெரிவித்த அவர், "ரஷ்யா எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் நிலைமை மற்றும் தன்மையைப் பொறுத்து இந்த சோதனைகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம்.

போர்க் காலங்களில் எப்படி இருக்கும் என்பது குறித்தும் ஆலோசிக்கும் வகையில் சோதனை நடத்தவுள்ளோம்.

நாம் இந்த ஏவுகணை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் அதுவும் உடனடியாக, நேற்று சோதனை செய்யப்பட்ட ஆயுதம் என்பது ரஷ்யாவின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு உத்தரவாதம் அளிப்பதாக இருக்கிறது.

இதுபோன்ற ஏவுகணை தொழில்நுட்பத்தை உலகில் வேறு எந்த நாடும் கொண்டிருக்கவில்லை, வரும் காலத்தில் அவர்கள் இதுபோன்ற ஏவுகணைகளை உருவாக்கலாம்.

அது ஆறு மாதங்களில் நடக்கலாம் அல்லது ஓராண்டில் நடக்கலாம் ஆனால் நம்மிடம் இப்போதே இருக்கிறது" என அவர் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 03
கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 24/11/2024

## கனடாவில் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய தமிழருக்கு பிடியாணை

கனடாவில் பாரிய தங்க கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய தமிழர் தலை மறைவாகியுள்ளார் என தெரி விக்கப்படுகிறது.

35 வயதான பிரசாத் பரமலிங் கம் என்ற நபர் இவ்வாறு 02

# குழந்தைகள் சாப்பிட வேண்டுமென்பதற்காக உணவு சாப்பிடாமல் இருக்கும் பெற்றோர்

## மோசமான நிலையில் கனடா

**ஜஸ்டின் ட்ரூடோ தலைமையில், வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில், மிக மோசமான நிலையில் தள்ளப்பட்டுள்ளதாக அறிக்கையொன்று வெளியாகியுள்ளது.**

**சால்வேஷன் ஆர்மியின் சார்பில் சால்வேஷன் ஆர்மியின் சார்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.**

**கனடாவின் பிரதமராக இப்போது ஜஸ்டின் ட்ரூடோ இருக்கிறார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூட காலிஸ்தான் பயங்கரவாதி கொலையில் இந்தியாவுக்குத் தொடர்பு இருப்பதாக இவர்தான் ஆதார மற்ற குற்றச்சாட்டுகளைக் கூறியிருந்தார்.**

இதற்கிடையில் இவரது ஆட்சியில் கனடா இப்போது வரலாற்றில் இல்லாத மிக மோசமான நிலையில் தள்ளப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



அந்த அறிக்கையில், “கனடாவில் அங்குக் குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்பதற்காகப் பெற்றோர் உணவு சாப்பிடாமல் இருக்கும் அளவுக்கு நிலைமை மோசமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அங்குள்ள பெற்றோர்களில் சுமார் 25 வீதம் பேர் தங்கள் குழந்தைகளுக்கு போதுமான அளவு உணவு கிடைப்பதை உறுதி செய்ய அவர்கள் எடுத்துக் கொள்ளும் உணவைக் குறைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதாவது பெற்றோர் சாப்பிடாமல் இருந்தால் தான் குழந்தைகளுக்கு போதிய அளவு உணவு தர முடியும் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே அங்கு வீட்டு வாடகை அதிகரித்துள்ளது.

வேலை வாய்ப்பு குறைந்து, பண வீக்கம் அதிகரித்துள்ளதால் கனடா மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதையே இது காட்டுகிறது.

இதன் காரணமாகவே கனடாவில் நான்கில் சுமார் ஒரு பங்கு பெற்றோர் தாங்கள் எடுத்துக் கொள்ளும் உணவின் அளவை குறைத்துள்ளனர். சுமார் 90 வீதம் மக்கள் பிற தேவைகளைச் சமாளிக்க மளிகைப் பொருட்களுக்கான செலவைக் குறைத்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கனடா நாட்டில் பலர் தங்கள் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாகக் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கனடா மிக மோசமான ஆபத்தில் இருப்பதையே இது காட்டுகிறது. அங்கு சத்து குறைவான உணவுகளின் விலை குறைவாக இருப்பதால் வேறு வழியின்றி பலர் அதை வாங்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், பண பிரச்சினை காரணமாக சுமார் 84 வீதம் பேர் உணவைச் சாப்பிடாமல் இருந்து விடுகின்றனர்” என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடா நாட்டில் அந்த அளவுக்கு நிலைமை மோசமாக இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் பொதுவாகவே 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கு முன்பு 2021 இல் அங்கு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது.அதில் கூட ட்ரூடோ கட்சிக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை.இதனால் கனடா நாட்டு மக்கள் ட்ரூடோ மீது கடும் அதிருப்தியில் இருப்பது தெளி வாகின்றது.

இப்போது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியில் இருக்கிறார். அடுத்தாண்டு அங்குத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மக்கள் அதிருப்தியால் நிச்சயம் தோல்வியைத் தழுவுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடாவில் கார் கொள்ளை; சிறுமிகள் மீது குற்றச்சாட்டு

கனடாவின் பிரம்டனில் கார் கொள்ளையில் ஈடுபட்டனர் என சிறுமிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு சிறுமிகள் உள்ளிட்ட நானுக்கு பேருக்கு எதிராக இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

வன்முறையான முறையில் கார் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கார் உரிமையாளரை ஏமாற்றி தம்மை சந்திக்க வருமாறு அழைத்துச் சென்று வாகனத் தரிப்பிடத்தில் வைத்து தாக்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.




பாதிக்கப்பட்டவரின் வாகனம், அலைபேசி மற்றும் பணப்பை என்பன வற்றை நான்கு பேர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

எவ்வாறெனினும், கொள்ளையிடப்பட்ட வாகனத்தை பொலிஸார் மீட்டது டன் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

13 மற்றும் 14 வயதான இரண்டு சிறுமியரும் 16 மற்றும் 17 வயதான சிறுவர்களும் இந்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



# இந்தியக் குடும்பம் உயிரிழந்த விவகாரம்: இரண்டு பேர் குற்றவாளிகளாக அறிவிப்பு





கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் உறைபனியில், நடந்தே நுழைய முயன்று இந்திய குடும்பம் பனியில் உறைந்து இறந்துகிடந்த சம்பவம் மூன்று நாடுகளை அதிரவைத்த விடயம் நினைவிருக்கலாம்.

இந்நிலையில், அந்தக் குடும்பம் உட்பட புலம்பெயர்வோர் பலரை அமெரிக்காவுக்குள் கடத்த உதவிய இருவர் வழக்கில் குற்றவாளிகள் என நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19 ஆம் திகதி, இந்தியாவின் குஜராத்திலுள்ள Dingucha என்ற கிராமத்தைச் சேர்ந்த, ஜகதீஷ் பட்டேல் (வயது 39), அவரது மனைவி வைஷாலி (வயது 37) மகள் விஹாங்கி (வயது 13) மற்றும் மகன் தார்மிக் (வயது 3) ஆகியோர் அடங்கிய குடும்பம், அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றது.

ஆனால், கனடா அமெரிக்க எல்லையில், பனியில் உறைந்து, அந்தக் குடும்ப உறுப்பினர்கள் நான்கு பேரும் பரிதாபமாக பலியாகிக் கிடந்த காட்சிகள் ஊடகங்களில் வெளியாகி அதிர்ச்சியை உருவாக்கின.

பட்டேல் குடும்பத்தினர் உட்பட பலரை கனடா அமெரிக்க எல்லை வழியாக கடத்திய விவகாரம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட ஹர்ஷ்குமார் பட்டேல் மற்றும் ஸ்டீவ் ஷாண்ட் என்னும் இருவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

Fergus Falls என்னுமிடத்தில் அமைந்துள்ள பெடரல் நீதிமன்றத்தில் அந்த வழக்கு கடந்த திங்கள் கிழமை துவங்கியது.

இந்நிலையில், ஆட்கடத்தல், புலம்பெயர்ந்தோரை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர சதித்திட்டம் தீட்டியது முதலான நான்கு விடயங்களில் ஹர்ஷ்குமார் பட்டேல் மற்றும் ஸ்டீவ் ஷாண்ட் ஆகிய இருவரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

அவர்கள் இருவருக்கும், முதல் இரண்டு குற்றங்களுக்காக குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் வரையும், மூன்றாவது குற்றத்துக்காக 10 ஆண்டுகளும் நான்காவது குற்றத்துக்காக 5 ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமறைவாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவின் பியர்சன் விமான நிலையத்தில் சுமார் 22.5 மில்லியன் டொலர்கள் பெறுமதியான தங்கம் காணாமல் போயிருந்தது.

இந்த தங்க கடத்தல் சம்பவத்துடன் சிலர் தொடர்பு பட்டிருப்பதாக குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த கொள்ளை சம்பவம் விமான நிலையத்தில் இடம் பெற்றிருந்தது.

இந்த கொள்ளை சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகளில் பிரசாத் பரமலிங்கம் முன்னிலையாக தவறியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் முதல் பிரசாத் பராமலிங்கத்தை தாம் பார்க்கவில்லை என அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

நீதிமன்றத்தில் முன்னிலையாக தவறிய காரணத்தினால் பிரசாத் பரமலிங்கத்திற்கு கனடிய நீதிமன்றம் திறந்த பிடிவிராந்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு பேருக்கும் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.






# பிரம்டனில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

கனடாவின் பிரம்டன் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றும் ஒரு நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த மாதம் ஆரம்பத்தில் குறித்த துப்பாக்கிச் சூட்டை சம்பவம் குயின்ஸ் வீதிக்கு அருகாமையில் இடம் பெற்றிருந்தது.

இந்த சம்பவத்தில் 37 வயதான ஸ்டர்லிங் சில்வெஸ்டர் என்ற நபர் உயிரிழந்தார்.


இந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 34 வயதான எலியின் பியட்ரி மற்றும் 30 வயதான லூக்காஸ் காடி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் பிராம்டன் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 33 வயதான அந்தோணி பியட்ரி என்ற நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

தேடப்பட்டு வரும் நபர் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர் எனவும் உடலில் பச்சை குத்தியுள்ளார் எனவும் சுமார் 6 அடி உயரமானவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




புத்தக அறிமுகம்

ராஜ் ராஜரட்ணத்தின்
சமனற்ற நீதி
அமெரிக்க நீதித்துறையின் சதியும் எனது போராட்டமும்

தலைமை: ரமணன்
உரைகள்: அரசி நீட்ரா செயர்ணலிங்கம் லெனின்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சியும் நடைபெறும்

காலம்: நவம்பர் 30, 2024 சனிக்கிழமை
நேரம்: மாலை 4:30 முதல் 7:30 வரை
இடம்: Scarborough Village CRC, 3600 Kingston Rd (@ Markham)

தொடர்புகளுக்கு: காலம் 416 731 1752 அல்லது kalam@tamilbook.com